# கலைஞரும் நானும்

47

**“எனக்கு கலைஞரை 50 ஆண்டுகளாகத் தெரியும். ஆனால், ‘அவருக்கு என்னைத் தெரியுமா’ என்று கேட்டால், அவரும் என்னை 50 ஆண்டுகளாகத் தெரிந்தே வைத்திருந்தார்” எனத் தனது நினைவுகளைப் பகிர்கிறார் சென்னை உயர்நீதிமன்ற ஓய்வுபெற்ற நீதிபதி கே.சந்துரு.**

■ **கே.சந்துரு,** ஓய்வுபெற்ற நீதிபதி, சென்னை உயர்நீதிமன்றம்.

## “மதிப்புரையே மிகப்பெரும் கௌரவம்!”



“அவருக்கும் எனக்கும் ஒரு தலைமுறை இடைவெளி உண்டு. நான் பள்ளி மாணவனாக இந்தித் திணிப்பு எதிர்ப்பு இயக்கத்தில் நுழைகின்ற காலத்தில் அவர் ஒரு பெரிய இயக்கத்தின் தலைவர்களில் ஒருவராகக் கொடிகட்டிப் பறந்தார்.

நான் அவரைத் தெரிந்து வைத்திருந்தாலும், அவரைச் சந்தித்தது நான்கு தடவைகளுக்கு மேல் இருக்காது. அதுவும் சில சமயங்களில், சம்பிரதாயச் சந்திப்பாக இருந்திருக்கும். அண்ணாவின் தலைமையில் தி.மு.க அரசு பதவியேற்ற போது அவரது அமைச்சரவையில் போக்குவரத்துத் துறை அமைச்சராக கலைஞர் நியமிக்கப்பட்டார். அவர் பதவியேற்ற சில மாதங்களில் சென்னை நகரில் போக்குவரத்துத் தொழிலாளர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் இடையே கசப்பான மோதல்கள் உருவாகின. போக்குவரத்து அமைச்சராக கலைஞர் அந்தப் பிரச்சினையை கவனமாகக் கையாண்டதை நான் அறிவேன்.

### கமிஷன் கேட்டு இயக்கம்

நான் சட்டம் பயின்று வக்கீலாக உயர்நீதி மன்றத்தில் பணியாற்றத் தொடங்கிய காலத்தில்தான், உள்நாட்டு நெருக்கடி நிலைமை பிறப்பிக்கப்பட்டது. அன்றைய முதலமைச்சர் கலைஞர் பகிரங்கமாக நெருக்கடி நிலைமையை எதிர்த்தார். அதனால், 1.2.1976 அன்று குடியரசுத் தலைவரால் தமிழ்நாடு அரசு கலைக்கப்பட்ட அன்றைய தினமே பல இடதுசாரித் தலைவர்கள் மற்றும் தி.மு.க., தி.க தலைவர்கள் மிசா சட்டத்தில் கைது செய்யப் பட்டனர்.

சிறைக் கைதிகளைக் காண்பதற்காக உயர்நீதி மன்றத்தில் மனு செய்து அனுமதி பெற்று, அவர்களைச் சந்தித்ததுடன் பின்னர் நெருக்கடி நிலைமை முடிவுக்கு வந்தபிறகு அந்தக் கொடுமைகளை விசாரிப்பதற்கு விசாரணைக் கமிஷன் அமைக்க வேண்டுமென்று இயக்கம் நடத்தியவர் கலைஞர். அதன் விளைவாக, நீதிபதி இஸ்மாயில் கமிஷன் அமைக்கப்பட்டது. அந்த கமிஷனில் இடதுசாரிக் கட்சிக் கைதிகள் சார்பாக நான் வாதாடினேன்.

### பாராட்டிய தலைவர்

கமிஷனின் முன்னால் இருந்த பாதிக்கப்பட்ட மூன்று தரப்பினரிடமும் ஒருமித்த கருத்து பல காரணங்களினால் ஏற்படவில்லை. இதனால் ஒருவருக்கொருவர் மாறுபட்ட கருத்தைக் கூறவும், அதனால் விசாரணையின் விளைவு பாதிக்கும் சூழல் ஏற்பட்டது. இந்தப் பிரச்சினையைக் கேள்விப்பட்ட கலைஞர், மூன்று தரப்பினரையும் ஒருமுகப்படுத்தியதில் வெற்றியும் கண்டார். அதன் விளைவுதான் கமிஷனின் அறிக்கை. சிறைக் கொடுமைகளை வெளிச்சம் போட்டுக் காட்டியதுடன், அன்றைய தமிழ்நாடு அரசுக்குக் கடும் கண்டனத்தையும் தெரிவித்தது.

**“மாணவர் பருவத்திலிருந்தே சமூகநீதிக்காகச் செயல்படுபவன்” என்று அவர் கூறியது என்னை ஆச்சரியப்பட வைத்தது.**

கமிஷன் விசாரணையைக் கூர்ந்து கவனித்து வந்த கலைஞர், தி.மு.க தரப்பில் ஆஜரான வக்கீல் பாளை சண்முகத்திடம் அதுபற்றித் தனது கருத்துகளைத் தொடர்ந்து தெரிவித்து வருவார். விசாரணைக் கமிஷனில் எனது பங்கைப் பற்றி வாய்விட்டு, அவர் பாராட்டியதை பாளை சண்முகம் என்னிடம் பல முறை பகிர்ந்திருக்கிறார்.

இஸ்மாயில் கமிஷனின் பரிந்துரைகளை நிறைவேற்ற சட்டமன்றத்தில் ஆணித்தரமாகப் பேசுவதற்குப் பலர் தயங்கிய நிலையில், கலைஞர் அவர்கள் பேசிய உரை வரலாற்றுச் சிறப்புமிக்கது.

அந்த உரையில், தவறுசெய்த அதிகாரிகளை அவர்கள் மதம் மற்றும் சாதி அடிப்படையில் பார்த்து விட்டுக்கொடுப்பது தவறென்று அவர் வாதிட்டது, இன்னும் காதில் ஒலிக்கிறது.

### தள்ளியவருக்குத் தண்டனை

2001-ஆம் ஆண்டு கலைஞர் நள்ளிரவில் கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டது பெரும் கொந்தளிப்பை உண்டாக்கியது. அவரது கைதைக் கண்டித்து, ஒன்றிய அரசு நடவடிக்கை எடுத்ததன் பேரில், அன்றைய ஒன்றிய அரசில் அமைச்சராயிருந்த தோழர் ஜார்ஜ் பெர்னான்டஸ், சென்னைக்கு வந்து சிறையில் அவரைச் சந்தித்தார்.

அப்போது இருந்த சிறைவிதிகளில் உறவினர்கள் தவிர, மற்றவர் சந்திப்பதற்கு இடமில்லை. அந்த விதிகளை எதிர்த்து, நான் நெடுமாறன் சார்பில் போட்ட வழக்கில் தடை உத்தரவு பெற்றிருந்ததனால், அந்தச் சந்திப்பு சாத்தியமாயிற்று.

கலைஞரின் நள்ளிரவுக் கைதின் போது நடைபெற்ற பல சம்பவங்களில் எனக்கு நேரடியாகத் தொடர்பு இல்லையென்றாலும், அந்தச் சமயத்தில் மனித உரிமைகளுக்கான வழக்குகளை நீதிமன்றங்களில் நடத்தி வந்து கொண்டிருந்தேன். நள்ளிரவில் கலைஞரைக் கைது செய்த காவல்படையில் முக்கியத் தொண்டராக இருந்த அதிகாரி முகமது அலி, கலைஞரின் கையைப் பிடித்து இடப்பக்கம் ஒரு தள்ளு தள்ளினார். அவர் அப்போது துணை இன்ஸ்பெக்டர் ஜெனரலாகப் பதவியில் இருந்தவர். ஆனால், அவருக்குத் தண்டனை வேறு வடிவில் காத்திருந்தது.

கர்நாடகாவில் முத்திரை வில்லைகள் மோசடியில் கைது செய்யப்பட்ட தெஹல்கி என்பவர் சென்னைக்கு வந்து முகமது அலியிடம் தொடர்பு கொண்டதோடு, தன்னைக் கைது செய்யாமல் பார்த்துக் கொண்டார். அதற்காகக் கைமாறியது கணிசமான தொகை. இதைத் தொடர்ந்து கவனித்துத் தெஹல்கி வழக்கில் முகமது அலியையும் சேர்க்க வேண்டும் என்ற வழக்கில் நான் ஆஜரானேன். அதன் பின்னரே அவர் முத்திரை வில்லை மோசடி விசாரணை வளையத்தில் கொண்டு வரப்பட்டார். அதன் பிறகே, அவர் கைது செய்யப்பட்டதுடன், காவல் அதிகாரி பணியிலிருந்தும் தற்காலிக பணிநீக்கம் செய்யப்பட்டார்.



### மாற்றுக் கட்சி அனுதாபம்

1988-இல் மார்க்சிஸ்ட் கட்சியிலிருந்து நான் வெளியேற்றப்பட்ட நேரத்தில், இந்திய இலங்கை ஒப்பந்தத்தைக் கண்டித்து பொதுக்கூட்டமொன்றை ஏற்பாடு செய்தோம். அந்தக் கூட்டத்தில் பேசவிருந்த மேற்கு வங்க நிதி அமைச்சர் அசோக் மித்ரா கடைசி நேரத்தில் வர இயலாததால் அதற்குப் பதிலாக வைகோ அவர்களைப் பேச வைப்பதற்காக, அறிவாலயம் சென்று கலைஞரைச் சந்தித்து உரையாடினேன்.

பிறகு, 2004-இல் பொடா சட்டத்தில் நெடுமாறன், வைகோ போன்றவர்கள் கைது செய்யப்பட்டனர். அப்போது நெடுமாறனுக்காக பிணை கேட்டு நான் உயர்நீதிமன்றத்தில் வாதாடிக் கொண்டிருந்தேன். ஆனால் வைகோ அவர்கள் பிணையில் வெளிவர விரும்பவில்லை. இருப்பினும் கலைஞர் அவர்கள் என்னை சிறையில் சந்தித்துப் பிணையில் வரவேண்டிய அவசியத்தை வலியுறுத்தும்படி கேட்டுக் கொண்டதன் பேரில், நான் வைகோவைச் சந்தித்து அவரது சம்மதம் பெற்றுப் பிணை மனுவை தாக்கல் செய்தேன். மாற்றுக் கட்சியாக இருந்தாலும் அவர்கள் மீது, அவர் கொண்டிருந்த அனுதாபம் குறிப்பிடத்தக்கது.

### தீர்ப்புகளுக்கு அங்கீகாரம்!

2006-ஆம் ஆண்டு என்னுடைய பெயர் உயர்நீதிமன்ற நீதிபதிக்காகப் பரிந்துரைக்கப்பட்ட போது, அதற்கு ஏற்கெனவே எதிர்ப்புத் தெரிவித்திருந்த ஜெயலலிதா அரசின் கருத்துகளைப் புறக்கணித்து என்னை நீதிபதியாக்குவதற்கு அவர் ஆட்சேபணை தெரிவிக்கவில்லை என்பது அவரது பெருந்தன்மையைக் காட்டும்.

நான் நீதிபதியாக இருந்தபோது சம்பிரதாய முறைப்படி அவர் தலைமை நீதிபதியைச் சந்திக்க, உயர்நீதிமன்றம் வந்திருந்தார். அப்போது எல்லா நீதிபதிகளையும் அவருக்கு இந்திய தலைமை நீதிபதி கே.ஜி.பாலகிருஷ்ணன் அறிமுகம் செய்துவைத்தார். என்னுடைய முறை வந்தபோது எனக்கு அறிமுகம் எதுவும் தேவையில்லை என்று அவர் குறிப்பிட்டபோதுதான் எங்கிருந்தாலும் அவர் என்னைக் கவனித்துக் கொண்டிருப்பது தெரியவந்தது.

நான் உயர்நீதிமன்ற நீதிபதியாக மதுரை அமர்வில் பணியாற்றிய போது, இந்து மதத்தில் பெண்கள் பூசாரியாக இருக்கலாமா என்ற வழக்கில், “மதத்தில் தடையில்லை. வேதங்களில் தடையில்லை” என்றும் கூறி, பின்னையக்காள் என்ற அந்தப் பெண்மணி கோயில் பூசாரியாகத் தொடரும்படி உத்தரவிட்டேன். அந்த உத்தரவு ஊடகங்களில் வெளியான போது, முதலமைச்சராக இருந்த கலைஞர் சட்டமன்றத்தில் அந்தத் தீர்ப்பை வரவேற்றுப் பதிவு செய்ததோடு, என்னைப் பாராட்டியும் பேசினார்.

“மாணவர் பருவத்திலிருந்தே சமூகநீதிக்காகச் செயல்படுபவன்” என்று அவர் கூறியது என்னை ஆச்சரியப்பட வைத்தது. அவரது அரசுக்கு எதிராக நான் அளித்த தீர்ப்புகளை மனதில் வைத்துக் கொள்ளாமல், அவர் இப்படி வெளிப்படையாகப் பாராட்டியது அவரது பெருந்தன்மையைக் காட்டுகிறது

நான் நீதிபதி பதவியிலிருந்து ஓய்வுபெற்ற பின் சமூகம், சாதி, சமயம் பற்றி அளித்த தீர்ப்புகளை ஒன்று திரட்டி ‘அம்பேத்கர் ஒளியில் எனது தீர்ப்புகள்’ என்ற ஒரு புத்தகத்தை வெளியிட்டேன். அந்தப் புத்தகத்தைப் பெற்ற கலைஞர் அதை முழுவதுமாகப் படித்ததோடு, அந்தப் புத்தகத்தைப் பற்றிய ஒரு மதிப்புரையை எழுதி 2.7.2014 ஆம் தேதியன்று ‘முரசொலி’யின் முதல் பக்கத்தில் வெளியிட்டது அதிசயத்திலும் அதிசயம்.

‘நீதிபதி சந்துருவின் நெறி தவறாத வழிகள்’ என்று தலைப்பிட்டு வெளியிட்டது எனக்குக் கிடைத்த மிகப்பெரிய அங்கீகாரமென்று நான் நினைக்கிறேன். 91 வயதிலும் அந்தப் புத்தகத்தை முழுதுமாகப் படித்துவிட்டு அந்த மதிப்புரையில், “நான் படித்த போது அடைந்த மகிழ்ச்சியை நீயும் அடையவேண்டுமல்லவா” என்று ‘முரசொலி’ வாசகர்களை ஊக்கப்படுத்தினார்.

எனக்கு தமிழ்நாடு அரசு சார்பில் ‘அம்பேத்கர் விருது’ வழங்கப்பட்ட போது அதன் குறிப்புரையில் இந்தப் புத்தகத்தைப் பற்றியும் குறிப்பிட்டிருந்தார்கள். ஆனால், அந்த விருதைவிட கலைஞர் என் புத்தகத்துக்கு அளித்த மதிப்புரையை நான் மிகப்பெரிய கௌரவம் என்று இன்றும் கருதுவேன்..

...பகிர்வார்கள்

---

## வருமா காலக்கெடு?

பா.ஜ.க. ஆட்சியில் இல்லாத மாநிலங்களில், அங்குள்ள ஆளுநர்களுக்கு எதிராகப் பல்வேறு மாநிலங்கள் உச்சநீதிமன்றத்தில் தொடுத்த வழக்குகள் ஒவ்வொன்றிலும் ஆளுநர்களுக்குப் பின்னடைவு ஏற்பட்டுக் கொண்டே இருக்கிறது. பஞ்சாப், கேரளம் ஆகிய மாநிலங்களைத் தொடர்ந்து தமிழ்நாட்டு ஆளுநரை கேள்விச் சாட்டையால் விளாசுகிறது உச்சநீதிமன்றம்.

சட்டமன்றம் நிறைவேற்றி அனுப்பிய மசோதாக்களை ஆளுநர்கள் ’இவ்வளவு காலம்தான்’ வைத்திருக்கலாம் என்கிற வரையறை அரசியலமைப்புச் சட்டத்தில் தெளிவாக வகுக்கப்படவில்லை. அதனால்தான் இத்தனைக் காலம் ஆளுநர்கள் ஒன்றிய அரசின் தாளத்துக்கு ஆடினார்கள்.

தற்போது அதற்கு ஒரு காலவரையறை கொண்டு வர உச்சநீதிமன்றம் முடிவு செய்திருப்பதாக தகவல்கள் வருகின்றன. அதைத்தான் இத்தனை காலமும் மாநில அரசுகளும் கேட்டன. இறுதியாக அந்தக் குரல்கள் நீதிமன்றத்தின் காதுகளில் விழுந்திருப்பது வரவேற்புக்குரியது.

## :ப்ளாஷ்பேக்



### அறுபதுக்கும் முப்பதுக்கும் வாழ்த்து!

1999-ஆம் ஆண்டு டிசம்பர் 3 ஆம் தேதி அன்று எனது 60-வது திருமண நாளை முன்னிட்டும், என்னுடைய மகன் எம்.டி.ஆர். புகழின் 31-வது பிறந்தநாளை முன்னிட்டும் தலைவர் கலைஞரைச் சந்தித்து வாழ்த்துப் பெறுவதற்காக நேரில் சென்றோம். அண்ணா அறிவாலயத்தில் தலைவர் கலைஞரும், பேராசிரியர் அன்பழகன் அவர்களும் உரையாடிக் கொண்டிருந்தனர். முன்னாள் தலைமை நிலையச் செயலாளர், ஆயிரம் விளக்கு உசேன் அவர்கள் தலைவரிடம் எங்களை அறிமுகம் செய்து வைத்தார். வாழ்நாளில் நாங்கள் குடும்பமாகச் சென்று, தலைவரிடம் வாழ்த்துப் பெற்று எடுத்துக்கொண்ட புகைப்படம் இது.



நாதன்

**-எம்.டி.ஆர்.நாதன், தலைமைப் பொதுக்குழு உறுப்பினர், சென்னை மேற்கு மாவட்டம்.**

இது போன்ற அரிய புகைப்படங்களை சிறு குறிப்புடன் எங்களுக்கு அனுப் புங்கள். அலைபேசி எண் அவசியம். அனுப்ப வேண்டிய முகவரி: அன்பகம், 614, அண்ணா சாலை, தேனாம் பேட்டை, சென்னை - 600 018. வாட்ஸ்அப் எண் : 90033-24473 மின்னஞ்சல் youthwing@dmk.in

## கருவூலம்

### போர்க்குணம்!

**1989-ஆம் ஆண்டு, மூன்றாவது முறையாக கழக ஆட்சி அமைந்ததும், சட்டப்பேரவையைக் கலைத்து விட்டு குடியரசுத் தலைவர் ஆட்சியை அமல்படுத்த வேண்டும் என பிரதமருக்குக் கடிதம் எழுதியதுடன், ஜனாதிபதியை நேரில் சந்தித்தும் வலியுறுத்தி வந்தார், ஜெயலலிதா. இந்த மிரட்டல்களுக்கு எல்லாம் அஞ்சாமல், தனது போர்க் குணத்தையும் விட்டுவிடாமல், ஆட்சியை நடத்தினார் கலைஞர்.**

## திராவிடத்தால் வாழ்கிறோம் 318




எழுத்து : கோவி.லெனின்
ஓவியம் : கி.சொக்கலிங்கம்

-வாழ்வோம்